# விமான நிலையத்தில் கொள்ளை

# நால்வருக்கு காவல்



(பெ.ஆறுமுகம்)

தெலுக் டத்தோ, ஏப்.26-

கே.எல்.ஐ.ஏ. விமான நிலையத்தில் கொள்ளையிட்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள நால்வரையும் தொடர்ந்து ஏழு நாட்களுக்கு காவலில் வைக்க தெலுக் டத்தோ மாஜிஸ்திரேட் புவான் ஷாரிப்பா நார்ஹாஸ்லீத்தா உத்தரவிட்டார்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் இங்குள்ள மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்ட 20 முதல் 30 வயதிற்கு உட்பட்ட மூன்று இந்திய நபர்கள் மற்றும் ஒரு சீன ஆகிய நால்வரையும் விசாரணை செய்வதற்கு ஏதுவாக தொடர்ந்து ஏழு நாட்களுக்கு தடுத்து வைக்க மாஜிஸ்திரேட் அனுமதியைப்பெற போலீசார் விண்ணப்பம் செய்ததை அடுத்து அவர்களை மே மாதம் 2ஆம் தேதி வரை தடுத்து வைப்பதற்கு மாஜிஸ்திரேட் அனுமதி அளித்தார்.

இதனிடையே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள மூன்று இந்திய நபர்களுக்கான வழக்கறிஞர்களில் ஒருவரான எம்.ஸ்தானிலாவுஸ் வேதநாயகம் கூறுகையில், கைது செய்யப்பட்டுள்ள நால்வரும் தொடர்ந்து புக்கிட் அமான் காவலில் இருக்க மாஜிஸ்திரேட் அனுமதி அளிக்க வேண்டும் என்ற போலீசாரின் கோரிக்கையை மாஜிஸ்திரேட் அனுமதித்தார் என்று தெரிவித்தார்.

கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் இருவர் உடன் பிறந்த சகோதரர்கள் என தெரிவித்த வழக்கறிஞர், இவர்களை வாரத்தில் ஒரு முறை குடும்பத்தினரும் வழக்கறிஞர்களும் நேரில் சென்று காண்பதற்கு மாஜிஸ்திரேட் அனுமதி வழங்க வேண்டும் என்ற விண்ணப்பத்தை புவான் ஷாரிப்பா நார்ஹாஸ்லீத்தா ஏற்றுக்கொண்டதாக கூறினார்.

இம்மாதம் ஏப்ரல் 9ஆம் தேதி கே.எல்.ஐ.ஏ விமான நிலையத்தில் ஆயுதம் ஏந்தி வெ.35 லட்சம் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் தீவிர நடவடிக்கையில் இறங்கிய போலீசார் ஏப்ரல் 18ஆம் தேதி ஜோகூர் மாநிலத்தில் மேற்கொள்ளப் பட்டிருந்த வெவ்வேறான மூன்று அதிரடி நடவடிக்கையின் மூலமாக கொள்ளையர்கள் நால்வரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். பேராக் மாநிலத்தைச் சேர்ந்த இவர்கள் ஜோகூர் ஸ்கூடாய் நகரில் உள்ள தொடர் வீடு ஒன்றிலிருந்து கடந்த ஏப்ரல் 18ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் போலீசாரால் வளைத்துப் பிடிக்கப்பட்டனர்.





கைது செய்யப்பட்ட ஆடவர்கள் நீதிமன்ற ஆணைக்கு பின் போலீஸ் வேனில் ஏற்றப்பட்ட போது.

## கே.எல்.ஐ.ஏ. கொள்ளை சம்பவம்

# நால்வருக்கு 7 நாள் தடுப்பு காவல்

பந்திங், ஏப். 26- (வி.எம். முனுசாமி)

நாட்டை உலுக்கிய கே.எல்.ஐ.ஏ. அனைத்துலக விமான நிலையத்தில் நிகழ்ந்த கொள்ளை சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட நான்கு ஆடவர்கள் 7 நாட்களுக்கு தடுப்புக் காவலில் வைப்பதற்கு தெலுக் டத்தோ மாஜிஸ்திரேட் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இம்மாதம் 9ஆம் தேதி நிகழ்ந்த ஆயுதமேந்தி கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பாக 24லிருந்து 30 வயது மிக்க ஒரு சீன ஆடவர் மூன்று இந்திய இளைஞர்களை போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் இரு இந்திய இளைஞர்கள் அண்ணன் தம்பி என்று குறிப்பிடத்தக்கது.

நேற்று காலை பலத்த போலீஸ் பாதுகாப்புடன் போலீஸ் வேனில் கொண்டு வரப்பட்ட நான்கு ஆடவர்களும் தெலுக் டத்தோ நீதிமன்ற மாஜிஸ்திரேட் புவான் ஷரிப்பா நோர் ஹஸ்லிதா பிந்தி சாட் சவீம் முன் நிறுத்தப்பட்டனர்.

நான்கு ஆடவர்கள் சார்பாக பேராக் தெலுக் இந்தானை சேர்ந்த வழக்கறிஞர் கே.எஸ். ராதா கிருஷ்ணன், தெலுக் இந்தானை சேர்ந்த தெரன்ஸ் நாயுடு மற்றும்

>> 13ஆம் பக்கம் பார்க்க